දුරකථන ) 011 2669192 , 011 2675011
தொலைபேசி ) 011 2698507 , 011 2694033
Telephone ) 011 2675449 , 011 2675280

ෆැක්ස් ) 011 2693866
பெக்ஸ் ) 011 2693869
Fax ) 011 2692913

විද්‍යුත් තැපෑල ) postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல )
My No. ) FHB/CNU/05/CHDR/2022

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )
Date ) 22.06.2022

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
# Ministry of Health

**பொது சுற்று நிருப இல:** 01 - 20 /2022

சகல பிரதி பணிப்பாளர் நாயகம், சுகாதார அமைச்சு

சகல மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்கள்

சகல பணிப்பாளர்கள், சுகாதார அமைச்சு

சகல பரவலாக்கப்பட்ட அலகுகள் மற்றும் விசேட இயக்கங்களின் தலைவர்கள்

சகல பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்

சகல போதனா வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்

சகல வைத்தியசாலைகளின் மருத்துவக் கண்காணிப்பாளர்கள்.

சகல சுகாதார வைத்திய அதிகாரிகள்

பிரதான சுகாதார வைத்திய அதிகாரி, கொழும்பு மாநகர சபை

## சிறுவர் ஆரோக்கிய மற்றும் விருத்திப் பதிவேடு (CHDR)
## H1316 (பெண்) மற்றும் H1317 (ஆண்)

சிறுவர் ஆரோக்கிய மற்றும் விருத்திப் பதிவேடானது (CHDR) பிறப்பிலிருந்து 19 வயது வரையான சகல சிறுவர்களுக்குமான ஒரு விரிவான சுகாதாரப் பதிவேடு என்பதுடன் இது இலங்கையில் தேசிய மட்டத்தில் சிறுவர்களிற்கான ஒரு பிரதான சுகாதாரப் பதிவேடாகக் கருதப்படுகிறது. இவ் ஆவணத்தினால் சேகரிக்கப்படும் ஆரோக்கியத் தகவல்களின் சொத்தானது, ஒவ்வொரு தனித்தனி குழந்தையினதும் முகாமைத்துவம் மற்றும் சகல மட்டத்திலுமான பராமரிப்பிற்கான திட்டமிடல் போன்ற நோக்கங்களுக்கு முக்கியமானதாகும். சுகாதார அமைச்சினால் அமுல்படுத்தப்படும் தேசிய தாய், சேய் சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தின் சிறுவர் ஆரோக்கிய அலகில் பயன்படுத்தப்படும் இம்முக்கிய ஆரோக்கியப் பதிவுகளிற்கான சுகாதார் இலக்கங்களாக H1316 (பெண் பதிவேடு) மற்றும் H1317 (ஆண் பதிவேடு) ஆகியவை அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றது.

சிறுவர் ஆரோக்கிய மற்றும் விருத்திப் பதிவேடானது (H 1316 மற்றும் H 1317) சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகத்தினால் அச்சிடப்படுவதுடன் இவை சகல அரச மற்றும் குழந்தை பிரசவத்திற்கான பராமரிப்பு வசதிகள் கொண்ட தனியார் நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்படுவதுடன் அதன் மூலம் இலங்கையில் பிறந்து குடியிருக்கும் ஒவ்வொரு குழந்தையும் இதனை இலவசமாகப் பெற்றுக்கொள்வது உறுதிசெய்யப்படும்.

அரச மற்றும் தனியார் பிரிவிலுள்ள சகல சுகாதாரப் பராமரிப்பு வழங்குநர்களும் இவ் CHDR இனை பயன்படுத்தி ஒவ்வொரு தனித்தனி குழந்தைக்கும் சுகாதார சேவைகளை வழங்குவதனையும் குழந்தை நலன்புரி பிணியாய்வு, வைத்திய நிபுணரின் பிணியாய்வு, வெளிநோயாளர் பிரிவு, உள்நோயாளர் பிரிவு, பாடசாலை மருத்துவப் பரிசோதனை, பல் பரிசோதனை, தனியார் சுகாதார சேவைகள் போன்ற ஒவ்வொரு நிகழ்வின் போதும் பதிவுகளைத் துல்லியமாகப் புதுப்பித்து வழங்குவதனையும் தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்.

சிறுவர் ஆரோக்கிய மற்றும் விருத்திப் பதிவேடு (H 1316 மற்றும் H 1317) இலங்கை அரசாங்கத்தின் ஒரு சொத்து என்பதுடன் சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகமானது இவ் ஆவணத்தின் அதிகாரமளிக்கப்பட்ட நிலையமாகும்.

இதனை நகல் எடுத்தல்/பிரதியெடுத்தல்/ இதன் உள்ளடக்கத்தினை அச்சிடுதல் அல்லது வேறு வடிவத்தில் டிஜிட்டில் மயமாக்கல் உள்ளடங்கலாக இதனை மறு ஆக்கம் செய்தல், முன் அனுமதி இன்றி இந்நூல் முழுவதனையோ அல்லது அதன் ஒரு பகுதியினையோ மீள்பதிப்பு செய்தல் அல்லது நூலின் உள்ளடக்கம் ஒரு தனிநபரினால் அல்லது யாதேனும் அரச அல்லது தனியார் நிறுவனங்களால் அதன் வர்த்தக நோக்கத்திற்காக அல்லது வர்த்தக நோக்கமன்றி அதனை உருக்குலைத்தல் இத்தால் தடைசெய்யப்பட்டுள்ளது.

இதன் உள்ளடக்கத்தினை பிரதி எடுத்தல் அல்லது டிஜிட்டில் மயமாக்கல் அல்லது மறு ஆக்கம் செய்தல் போன்ற எந்தவொரு வேண்டுகோளும் முறைப்படி எழுத்தில் தயாரிக்கப்பட்டு அனுமதிக்காக சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் சார்பாக குடும்ப சுகாதாரப் பணியகத்தின் தாய், சேய் சுகாதாரப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

சகல சுகாதார சேவை பராமரிப்பு வழங்குநர்களும் இந்த சிறுவர் ஆரோக்கிய மற்றும் விருத்திப் பதிவேட்டை (H1316 மற்றும் H 1317) ஒரு தேசிய சிறுவர் ஆரோக்கியப் பதிவேடு எனக் கருத்தில் கொள்வதோடு, இதன் மூலம் சிறுவர்களும், பரந்தளவில் நாடும் உச்ச நன்மையைப் பெற்றுக்கொள்ளும் முகமாக இம்முக்கிய ஆவணத்தினை சரியாக பயன்படுத்துவதனை உறுதிப்படுத்துமாறு நான் வேண்டிக்கொள்கிறேன்.

தயவுசெய்து இச்சுற்று நிருபத்திலுள்ள தகவல்களை உங்களது மாகாணம், மாவட்டம், சுகாதார நிறுவனங்கள், சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு மற்றும் தொழில்வல்லுநர் கல்லூரிகள் போன்றவற்றின் சகல சுகாதார சேவைப் பராமரிப்பாளர்களின் கவனத்திற்கும் கொண்டுவருவதுடன் அவர்கள் எல்லா நேரங்களிலும் இவ் அறிவுறுத்தல்களிற்கு கட்டுப்படுகிறார்கள் என்பதனையும் உறுதிப்படுத்தவும். இச்சுற்றுநிருபத்தினை மீறுவோருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

வைத்தியர் அசேல குணவர்த்தன
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. ASELA GUNAWARDENA
Director General of Health Services
Ministry of Health
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

பிரதிகள்:

சகல மாகாண சுகாதார செயலாளர்கள்,

தலைவர், இலங்கை மருத்துவ சங்கம்.

தலைவர், சிறுவர் வைத்திய நிபுணர்களின் கல்லூரி

தலைவர், இலங்கை மருத்துவ நிர்வாகிகளின் கல்லூரி

தலைவர், இலங்கை மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் மருத்துவ நிபுணர்களின் கல்லூரி

தலைவர், இலங்கை சமூக வைத்திய நிபுணர்களின் கல்லூரி.

தலைவர், இலங்கை பொது வைத்திய நிபுணர்களின் கல்லூரி

தலைவர், இலங்கை சிசுக்களுக்கான சங்கம்

தலைவர், இலங்கை மருத்துவப் போஷணை சங்கம்

தலைவர், பொது வைத்தியப் பயிற்சியாளர் கல்லூரி

தலைவர், சுதந்திர மருத்துவ பயிற்சியாளர் சங்கம்

தலைவர், இலங்கை போஷணை சங்கம்
பீடாதிபதிகள், சகல மருத்துவ பீடங்கள்